©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 27] சென்னை, புதன்கிழமை, ஜூலை 5, 2017
ஆனி 21, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 75, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள் 16 மே 2017.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), ஆணை புது தில்லி, 25–4–2017.**

**S.O. 1288 (E).**— 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, 2016 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையில் திருத்தம் செய்வதற்கு பின்வரும் ஆணையை, இதனால் பிறப்பிக்கிறது. அவையாவன:

1. (1) இந்த ஆணை, 2017 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணை என்று அழைக்கப்படும்.

(2) இந்த ஆணை 29–04–2017 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு சில குறிப்பிட்ட உணவுப்பொருட்கள் மீதான உரிமத் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியைச் சேர்ந்த துணைப்பகுதி (2) இல், இனம் (ii)–க்குப் பதிலாக பின்வரும் இனம் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–

"சர்க்கரையைப் பொறுத்தவரையில் 28–10–2017 ஆம் நாள் வரையிலான கால அளவிற்கு;".

[கோப்பு எண் S-10/1/2017-ECR&E]

**பி.வி. ராமா சாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.